**செப்டம்பர் - 27**

**"உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக."   - மத் 4 : 7.**

சோதனைகள் தொடர்ந்து கர்த்தருடைய ஜனங்களை தாக்குகின்றன. அவருடைய நாமத்தில் சில அதிசயமான வேலைகளை நடப்பித்து இவ்விதமாகத் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் நாங்கள் பரலோகத்தில் பிரியமான ஆட்களாக இருக்கிறோம் என்று நிரூபிக்க யோசனைகள் எழும்புகின்றன. நாம் செய்கிறதற்கு பிதா நமக்குக் கொடுத்திருக்கிற வேலை உலகத்தை நம்பச் செய்கிற வேலையோ அல்லது நம் சார்பாக உள்ள அவருடைய தயையையும் அவரில் நமக்கிருக்கும் நம்முடைய மேன்மையையும் காண்பிக்கிற வேலையோ அல்ல. ஆனால் உண்மையாகவே, அதிசய ஊழியர்களாக இருக்க வேண்டும் என்கிற ஆசையை விட்டுவிட்டு, தாசர்களாகவும், சத்தியத்தின் ஊழியக்காரரின் நியாயமான நிலையிலிருந்து கொண்டு அமைதியாகவும், தாழ்மையாகவும், ஆகிலும் நற்பயனளிக்கத்தக்கதாக நியாயம் ஒழுங்கு அனுமதிக்கிற பிரகாரம் நம்முடைய வெளிச்சம் பிரகாசிப்பதும், அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிப்பதுமே நாம் படிக்க வேண்டிய படிப்பினையாய் இருக்கிறது. **- Z '04, 9 (R 3296)**

தேவனை பரீட்சை பார்ப்பதாவது, அவரை பரிகாசம் செய்வதும், அவருடைய நன்மையின் மீது துணிவு கொள்வதும் அவருடைய ஏற்பாடுகளில் வீணாகத் தலையிடுவதுமாகும். எவனாகிலும் அவ்வாறு செய்வானானால் தன்னையே கொலை செய்கிறவனாயிருப்பான். பார்வோன் விசயத்தில் நடந்தது போல அவர் தன்னைப் பரீட்சை பார்க்கிறவர்களிடம் நீடிய பொறுமையுள்ளவராய் இருந்தாலும், தேவன் தம்மை பரிகாசம் பண்ணவிடார் முடிவாக சோதனைக்காரன் அவருடைய கோபத்தின் உக்கிரத்தை உணரச் செய்வார். கர்த்தருக்காக இருக்கும் நமது பயபக்தி, நாம் அவரை சோதிப்பதிலிருந்து தடுக்கத்தக்கதாக அவ்வளவு பெரிதாக இருக்க வேண்டும். மற்ற ஒவ்வொன்றிலும் கொடுக்கிறது போல, இதிலும் நமது பெரிய இரட்சகர் பயபக்தியோடு கூடிய கவனம் கீழ்ப்படிதல், இவைகளின் ஒரு உதாரணத்தைக் கொடுக்கிறார். இது நமது தேவனாகிய யேகோவாவை சோதிப்பதிலிருந்து நமக்கு பாதுகாப்பளிக்கும். தேவனுக்காக உள்ள பயபக்தி இந்த விசேஷ சங்கதியிலும் கூட ஞானத்தின் ஆரம்பமாயிருக்கிறது. **- P '34, 128.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**உபா 6:16; யாத் 5:2; எண் 15:30; 1ராஜா 20:28; 22:24; யோபு 15:25; சங் 19:13; 131:1; ஏசா 10:15;14:13,14; 45:9; 65:5; மத் 4:5,6; லூக் 18:11,12; ரோம 9:20,21; 1கொரி 10:9-12; 2தெச 2:3,4; 2பேது 2:10,11.**

**கோபுர வாசிப்பு : Z '04, 5 (R 3298).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் தேவனைப் பரீட்சை பார்த்தேனா? அல்லது மகிமைப்படுத்தினேனா? எப்படி? பலன் என்ன?**